

ஈழத்துக் கருகம்பனையூர்
அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி சதகம்
க.

ஓம் சக்தி

ஈழத்துக் கருகம்பனையூர்

# அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி சதகம்

DONATED TO
JAFFNA UNIVERSITY LIBRARY
BY
Prof. Karthigesu Sivathamby
in Memory of his Father
PANDIT SAIVAPULAVAR
T. P. KARTHIGESU
2000

க. வீரகத்தி

'இராசி' தேவஸ்தான வெளியீடு - 2
1987

## ‘கோபுர உரை’

### I

கருகம்பனையூர் அருள்மிகு நாக இராச இராசேசுவரி ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவர் திரு. வே. குமாரவேல் அவர்களும் என் இனிய நண்பர் திரு. அ. கதிர்காமத் தம்பி (சி. ரீ. கே.) அவர்களும் அன்னை நாக இராச இராசேசுவரிமேல் பதிகம் ஒன்று பாடித்தாருங்கள் என என்னைக் கேட்கிறார்கள்.

ஏற்கெனவே ‘இராசி’யைப் பாடிப் பரவவேண்டும் என்று நேர்ந்து நேர்ந்துகொண்டிருந்த எனக்கு அவர்கள் கேட்டது வியப்புத் தந்தது. பதிகம் என்ன, சதகமே பாடப்போகிறேன் என்று விநயமாகப் பதில் சொல்லி, பதிகம் பாடிக் கொடுத்துவிட்டு 1-12-85 இல் சென்னைக்கு வந்துவிடுகிறேன்.

### II

சென்னையில் என் பாசமிகு நண்பரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறை இணைப் பேராசிரியருமான டாக்டர் மா. செல்வராசன் அவர்கள் சென்னைப்

பல்கலைக்கழக இணைவகத்திற்கு (மெரினா வளாகம்) அருகாமையில் அமைந்துள்ள பட்ட மேற்படிப்பு ஆண்கள் விடுதியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தருகிறார்கள். எனக்கே உரிய சுதந்திர இயல்புகளுடன் தங்கும் நல்வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விடுதி உலகப் புகழ்பெற்ற மெரினா கடற்கரைக்கு எதிரில் உள்ளது; என் சதக யாத்திரைக்கும் மிகமிக உவப்பான சூழ்நிலையும் ஆகிறது.

## III

அதிகாலை 5 மணி அளவில் குருவிகளும் பறவைகளும் செட்டையும் சிறகும் அடித்து, குரலும் கூச்சலும் கொடுத்து, மரத்துக்கு மரம் தாவி, மகிழ்ச்சிகரமாகக் காலை எழுச்சியை அநுபவித்துக் கொண்டாடுகின்றன.

நானும் விடுதியின் முன்பு எல்லைக் கற்களாக அமைந்துள்ள பரந்த சலவைக்கல் ஒன்றில் – 'கன்மாப்பலகை' யில் – அமர்ந்துகொள்கிறேன்.

முற்றத்திலும் வாசலிலும் கோலம்போடும் குறுநகைத் தாமரைகள் கண்விழிக்க முன்னராகவே அன்னை பராசக்தி கீழ்வானக் கோடியில் நவநவமான எழிற்கோலங்கள் போட்டுவிட்டு, புன்னகைப் பொலிவோடு செந்தணற் பீடத்தில் செந்தணற் கோளத்தை வைத்து, அவைகளுக் கூடாகத் தன் பொற்கரங்களால் மெல்லமெல்லென உயர்த்துகிறாள்!

அடுத்த கணத்தில் பூசனைக்கு விலக்கப்பட்ட, மங்கள நிகழ்வுக்கு விதிக்கப்பட்ட முள்முருக்கின் (கல்யாண முருங்கை) பூமொட்டு வண்ணம்! மறுகணம் சிவந்த ரோசா மலர்மொட்டு நிறம்! அடுத்த நொடி தங்கத் திரளின் தக தகப்பு!

கண்ணிமைப் பொழுதில் பரிதிக் குழந்தை தன் பொற் கதிர்க் கரங்களை நீல அலைகளின்மேல் பரப்புகிறது! என்ன சௌந்தர்யம்! உடல் அடங்கலும் விழிகள் இல்லையே என்ற மன ஆதங்கத்துடன் எழுகிறேன்.

மீண்டும் 5 மணி அளவில் அதே கன்மாப் பலகையில் அமர்கிறேன். காயாம்பூ மேனிவண்ணத் திரையின்முன், மெரினா கடற்கன்னி மாதவியாக நடன அரங்கு ஏறுகின்றாள்! பிரபஞ்சமே அவள் காலடியில் மண்டுகிறது! நானோ அன்னை இராச இராசேசுவரியின் எழில் உலகில் ஆழ்கிறேன்!

காலையும் மாலையும் இந்தவிதம் கற்பனைப் பரவசம் ஊட்டிக் கழிய, ஒய்வு நாட்களில் சென்னையிலும் சென்னைக்குச் சுற்றுப்புறமும் உள்ள சக்தி ஆலயங்களைத் தரிசனம் செய்கிறேன். இந்த இனிய நேரங்களுக்கூடாகவே என் சதக யாத்திரையும் முடிவடைந்துவிட்டது. விட்டது என்ன, சிறிது தூரம் அதிகமாகவே சென்றுவிட்டேன். அன்னை கருணைப்பாலை நமக்கு அளந்தா தருகிறாள்?

## IV

என் சதகச் சிந்தனை யாத்திரையில் முழுமையாக மானுட கோடியை அன்னையின் முற்றத்தில் நின்று பார்க்கிறேன். அல்லலும் அவதியும்படும் கோடானுகோடிகளைக் கண்டு சிதையும் இதயம். அல்லற்படுத்தும் ஒருசில நூறுகளை நோக்கிச் சீற்றமும் அடைகிறது.

சில தரிப்புக்களில் அகவயப்பட்டு நிற்கிறேன்; இதுவரை வாழ்ந்த என்னையும் இப்போது வாழ்கின்ற என்னையும் இனி வாழப்போகும் என்னையும் நினைக்கிறேன்; என் நண்பர்களை நினைக்கிறேன்.

நான் பெற்ற செல்வங்களை மனம் கசிந்து சிந்திக்கின்றேன்; அவர்கள் அளவிலான எல்லாப் பிள்ளைகளையும் அவ்விதமே சிந்திக்கிறேன்.

என் பேரன்களையும் பேத்திகளையும் பாசக் கூர்மையுடன் பார்க்கிறேன். ஏனைய எல்லா மழலைகளையும் அவ்வாறே பார்க்கிறேன்.

என் இனத்தின் நடைமுறை வாழ்வு கருதி மாணவர்களை இருமுனைப்படுத்தி 'இராசி'யை இரக்கிறேன்.

சில தரிப்புக்களில் என்னினத்தின் அல்லலும் அழிவும் ஓயாத வேதனைக் குமுறலும் கூக்குரலும் என் உயிரைக் கசக்கிப் பிழிகின்றன; கண்ணீரால் அவர்கள் காயங்களைக் கழுவுகிறேன். சாகடிக்கப்பட்டவர்களின் ஆத்மாக்கள் பசாசுகள் ஆகிவிடவில்லை; இளைய தலைமுறையின் இரத்தத்தோடும் இதயத்தோடும் இரண்டறக் கலந்து சுதந்திர வேகத்தையும் வீரியத்தையும் கோடி கோடி மடங்கு அதிகரித்து விடுவதை உணர்கிறேன். அந்த ஆவிகள் சாவதில்லை; இரத்தச் சரித்திரம் எழுதுகின்றன!

இடையிடையே அன்னை அள்ளிக் கொட்டும் அதிசய இயற்கையின் எழில் மேனியில் எடுபடுகிறேன்; பாடுகிறேன். பசியையும் பட்டினியையும்தான் பாடவேண்டும்; வேறு எதனையும் பாடக்கூடாது எனக் கருதிக்கொள்ளும் பாமரத்தனம் எனக்கில்லை. மனித மனம் மனித முகம் பூரித்துச் சிந்தும் பொலிவையும் புன்னகையையும் கண்ணுற அனுபவித்து ஆனந்தம் உறுவதற்காகவே சகலவிதமான அநீதங்கள், துயரங்களிலிருந்தும் அவர்கள் விடுபடல் வேண்டும் எனத் துடிக்கிறேன். எங்கே அழகு அங்கே அன்னை இராச இராசேசுவரி! எங்கே அன்னை அங்கே நான்!

மீண்டும் ஐந்து கண்டங்களையும் தரிசனம் செய்கிறேன். அநீதங்களுக்கு மரண அடி கிடைக்காதா? மனித சஞ்சலத்துக்கும் சலிப்புக்கும் விடிவு ஏற்படாதா? என ஏங்குகிறேன். ஒருநெறிப்பட்ட, பொதுநெறிப்பட்ட, ஒருலக அரசு அமைப்பைக் கனவு காண்கிறேன். அதனையும் அன்னையிடம் முறையிடுகிறேன்.

இந்தப்படியான சிந்தனை ஓட்டத்தில் கி. பி. 2500 சற்று முன்னாகவும் பின்னாகவும் என்முன்னாக வெளிச்சம்

போட்டு நிற்கிறது! இப்போதே அனைத்துலக சுதந்திரப் பள்ளுப் பாடலைப் பாடிவிடலாமா என்ற எண்ணமே இதயசுகம் அளிக்கிறது.

சங்கதிகள் எவையானாலும் அவை அத்தனைக்கும் ஊடாக அன்னை "இராசி" இழையோடி நிற்கிறாள்; பாவிக மாக மிளிர்கிறாள்! அன்னை என்னை, எம்மைத் தேடிக் காணும்படியாக முயற்சிக்கிறேன்.

V

இதற்குத் துணை அதற்குத் துணை என்றில்லாமல் எதற்கும் துணை அன்னை இராச இராசேசுவரியே என மனம் தளம்பாமல் உணர்வுபூர்வமான உறுதிப்பாட்டுடன் நிலைத்து நிற்போம்.

மனிதாபிமான உணர்வை வளர்த்து, மலர்ச்சியும் மகிழ்ச்சியும் நல்கும் ஒருலக ஒருமைப்பாட்டுக்கான சிந் தனை, சொல், செயல் மூன்றும் ஒரே நேர்(மை)க் கோட் டில் இயங்கும்வகையான அறிவு வலுவை அன்னையிடம் இரந்து இரந்து பெற்று, புதிய உத்வேகம் உறுவோம். மனிதாபிமான உணர்வே மனிதாலயத்துக்கூடாக அன்னை இராச இராசேசுவரியின் அருளாலயத்துக்குள் பிரவேசிக் கும் மகத்தான புனித 'பொற்கோபுர' வாயில் என உள் ளத்தால் உணர்ந்துகொள்வோம்.

அன்னை 'இராசி'யிடம் நாம் இரப்பவை
அருளும் அன்பும் அறமும் இணைந்த
பொருளும் பொன்னும் போகமும் என்போம்!
புனித இலட்சியப் போக்கும் என்போம்.

வணக்கம்

19, பி. ஜி. ஆண்கள் விடுதி, க. வீரகத்தி
காமராசர் சாலை,
சென்னை 600 005
31-3-1986.

## ஈழத்துக் கருகம்பனையூர்
## அருள்மிகு
## நாக இராசஇராசேசுவரி கோயில்

சிந்தனையால் சிறப்புயரும் எங்கள் நவஈழம்
வந்தனைக்கு உரியதெனச் சங்கே முழங்கு!

I

ஈழத்தின் வடகோடி மாநிலம் யாழ்ப்பாணம். உல கில் இசையால் பெயர் கொண்ட ஒரேயொரு நாடு யாழ்ப்பாணக் குடாநாடு; 'வீணுகானபுரம்' என்றழைக் கும் வடமொழி; மூலவளம் குறைந்தாலும் மூளைவளம் அபரிமிதம்! 'யாழினர்' அல்லாத கற்றவர் பலரின் இப் படியொரு கணிப்பு; இன்று நீதிக்காக அதிக விலை கொடுத்துக் கொண்டிருக்கிறது!

யாழ். வட கரையில் நான்கு துறைமுகங்கள் உண்டு. பழம்பெரும் புகழ்ப் பருத்தித்துறையை அடுத்துப் பிரசித்த மானது காங்கேசன்துறை. யாழ்ப்பாணப் பட்டினத்தி லிருந்து 14 மைல் தொலைவு. தமிழ் நாட்டுத் தூத்துக் குடித் துறைமுகத்துக்கும் காங்கேசன் துறைமுகத்துக்கும் இடைத்தூரம் சுமார் 20 மைல்; ஒரு மணித்தியாலக் கடற்பயணம். அண்மைக் காலங்களில் ஈழத்தமிழ் அகதி களை இறக்குமதி செய்கிறது!

காங்கேசன் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாகக் கடற் காற்றுப் பனிப்புடன் செல்லும் நெடுஞ்சாலைவழி சுமார் இரண்டு மைல் தூரம் செல்ல, பாபநாசம் செய்யும் புனிததீர்த்த மகிமை கொண்ட கீரிமலைச் சந்தியைச் சேர்ந்து விடுவோம். குற்றால அருவிக் குளிப்பிலும் அதி சுகமும் இதமும் தருவது கீரிமலைக் கேணி நன்னீர் ஊற் றுக் குளிப்பு! கீரிமலை உலக உல்லாசப் பயணிகளின் சுற்றுலா மையமும் கூட. 1982க்குப் பின் விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் இழந்து வெறிச்சோடிக் கிடக்கிறது!

II

கீரிமலை நகுலேசுவரன் கோயில் முன்றுக யாழ். நோக்கிச் செல்லும் சிறிய சாலையில் கூப்பிடு தூரம் சென்றதும் அன்னை அருள்மிகு நாக இராசஇராசேசுவரி கோயில் கொண்டுள்ள திருமிகு கருகம்பனை ஊரில் கால் வைத்து விட்டோம்.

விழிகள் துளாவும் மூலைமுடுக்கெல்லாம் தோட்டங்கள் – தோப்புகள் – சோலைகள் – கூடல்கள்–ஒரே பச்சைப் பசேல்!

கொடி முந்திரிகைப் பந்தல்களில் மழலை மகிழும் திராட்சைக் கனிக் குலைகள்! மேலே, வாழைக் கனிக் குலை கள்! சற்று மேலே கமுகின் பவளக்குலைக் கொத்துக்கள்! இன்னும் மேலே இனிய இளநீர்க் குலைகள்! மேலே மேலே குறுகுறு குழந்தைகளின் கனிவாய் இதழும் நாவும் துடிக்கும் நொங்குக் குலைகள்! இடையிடையே மாங்கனி யும் தேன் வருக்கையும்!

சிவை மயமான கருகம்பனை அடங்கலும் கனி மயமாகக் கண்களை நிறைக்க, மனக் கனிவும் மதிக்கனிவும் மிக்க மக்களின் உபசரிப்பு நமது இதயத்தைக் கனியவைக்கிறது. இப்போது உள்ளூர்த் தமிழ் அகதிகளுக்குப் புகலிடமும் ஆகிறது!

கருகம்பனை, 'சண்முகா ஸ்டோர்ஸ்' முச்சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாக வளைந்து வளைந்து முடங்கி முடங்கிச் செல்லும் ஒடுங்கு வழிகள் ஊடாக 10 அல்லது 15 நிமிட நடை. அன்னையின் திருவாசல் முன் வந்துவிட்டோம்.

## III

என்ன புதுமை; சூழவரக் கற்பகத் தருக்கள்; நடுவே அன்னையின் அருள் அரசாங்கப் பணிமனை!

கொன்றைக் கொழுந்தி பொன்வளையங்கள் காதிற் பொலியப் புன்னகைப் பூரிப்போடு வரவேற்கிறாள். ஆலய வாசலைத் தாண்டி உட்பிரவேசிப்போம். சிறியதொரு தென்னங்கீற்றால் வேய்ந்த கொட்டில்! உள்ளே மிகப் புராதனமான ஆலயத்தின் இறுதி எச்சமாக, வரலாற்றுத் தடயமாக, பாசி படர்ந்து கொண்ட ஒரு சுவர்க்கிலம்! அதன் அடியில் அருவும் உருவும் ஆன அகிலாண்ட நாயகி அன்னை நாக இராச இராசேசுவரியின் திருப்பார்வை முன்...

ஐந்தும் கெட அறிவும் அழிகிறது. சாட்டாங்கமாக விழுகிறோம். உணர்விலே ஒருவித மின்பாய்ச்சல்! எல்லாம் மறந்த நிலையில் ஒருசில விநாடிகள்!

ஏதோ இதுவரை காலமும் எட்டாத, கிட்டாத புதையல் பெற்ற மனநிறைவுடன், ஆலயத் திருப்பணிச் சபையினரால் புதிதாக நிர்மாணம் பெற்றுள்ள கருவறை மூலத்தானத்தில் ஒளி மயமான அன்னை இராசியைப் பொச்சம் அடங்கத் தரிசனம் செய்கிறோம். புத்துணர்வுத் தென்றல் புத்தியிலே படருகிறது.

இனி உலக மாதாவான அந்த அநுராசியின் காந்தக் கனி விழிப்பார்வைப் பிடியிலிருந்தும் பிடிப்பிலிருந்தும் விடுபடுவதோ விலகிநிற்பதோ நடக்கிற சங்கதி அல்ல.

'இராசி', தீராப் பிணி அனைத்தும் தீர்ப்பவள் ஆகவும் போகம் அனைத்தும் புசிக்க வைப்பவளாகவும் அன்புள்ளங்கள் குக்குலியடித்துக் கூத்தாடுகின்றன.

அன்னை இராச இராசேசுவரியின் அடிக்கமலங்களைச் சேரும் – இடைவிடாது இதய மலரில் வைத்துத் தியானிக்கும் – இள மொட்டுகள் வடிவாக மலர்ந்து வாசனை வீசும்!

முன்னரே பூத்தவை வாடிக் குப்புற வீழ்ந்து கருகாமல் நித்திய மலர்ச்சியுடன் ஞான வாசனை வீசிக்கொண்டே யிருக்கும்.

பூத்து வாடி விழுந்து கருகியவையும் மீண்டும் எழுந்து முந்திய மலர்ச்சியிலும் மலர்ச்சிமிக்கு மனுக்குலத்தைக் கவர்ச்சித்துக் கொள்ளும். மாண்பு மிகும்.

அன்னை மீன் விழிப்பார்வையில் மலரும் இந்நறும் புஷ்பங்கள் மக்கள் வாழ்வியலைச் சுத்தப்படுத்தியும் சுகந்தப் படுத்தியும் மனிதப் பூங்காவில் மிளிர்வனவாம்! மங்காத வரலாற்று ஏடுகளுக்குரியனவாம்.

வியத்தகும் இத்திருத்தலத்தில் ஆண்டுதோறும் விசய தசமிப் பெருவிழா! ஒவ்வொரு பௌர்ணமியிலும் முற்றம் வீதி அடங்கலும் பொதுமக்கள் பொங்கல்! திங்கட்கிழமை களில் விசேட ஆராதனை! இப்படி ஒரு ஒழுங்கு. ஆனாலும் 'அன்னை அருள் அற்புதம்' அறிந்தறிந்து அன்றுடம் குவியும் மக்களின் சுய பூசனையே ஆனந்தக் காட்சி ஆகிறது!

> நாக இராச இராசேசுவரி – அன்னை
> நல்லவை தந்திட அழைக்கிறாள்!
> போக புவனங்கள் வேண்டுவீர்! – இன்றே
> போய்விடுவீர்! அவளைத் தொழுவீரே!

நம்பினார் நலிவதில்லை நாச்சியருள் தீர்ப்பு. சுபம்!

சென்னை
*31 – 03 – 1986*

**க. வீ.**

## பதிப்புரை

அருள்மிகு நாக இராச இராசேஸ்வரி அன்னையே! அஞ்சலிக்கிறோம், அகம் சிலிர்க்கிறோம், நெஞ்சம் நிறைந்த பூரிப்புடன் நறுமண வாசனைப் பூங்கொத்தான இந்தச் சதகநூலை உனது மாதுளம்பூ வண்ணத் திருவடிகளில் வினயமாக வைத்துக் காணிக்கை செய்கிறோம். செவ்வல்லி அருள் விழிகளின் வாழ்த்துக்களை வேண்டிப் பணிகிறோம்.

பாடிப் பரவசப்படுவதற்காக அன்றொரு நாள் பண்டிதர் ஐயாவைப் பார்த்தோம். பார்த்திருக்கப் பதிகம் பாடித் தந்து விட்டு, பதிகம் என்ன சதகமே பாடுகிறேனே என்று கூறிக் கொண்டே பாரத நாட்டுக்குச் சென்று விட்டார்கள் ஐயா அவர்கள்.

தமிழகத்தில் இருந்து திரும்பியதும் நேராகவே உன்னிடம் வந்து உன் பாதார விந்தங்களில் சதக மலர்களைத் தூவிப் பூசனை செய்த பின்பு, இதோ வாடாமலர்ப் பிரசாதம் என எங்களிடம் கையளித்தார்கள். பண்டிதர் ஐயா அவர்களுக்கு நன்றி கூறுவது எல்லையற்ற நின் பெருங் கருணைத் திறத்தை எல்லைப்படுத்துவதாக முடியும் அல்லவோ அம்மா!

சதகநூல் உருவாக்கத்திற்கு உதவிய 'டில்கா' உரிமையாளர் திரு. தனபாலசிங்கம் அவர்களும், மற்றும் சகல வழிகளிலும் நிதியும் முயற்சியும் நல்கிய நின் அன்பர்களும் அன்னையே உன் வாழ்த்துக்கு உரியவர்களே!

அம்மா! நின் அருள் ஒளிவீசும் ஆலயம். இணையற்றதொரு அறிவாலயமாகவும் மிளிர நினது புண்ணியத் திருவடிகளைப் பரவிக் கொண்டே இருப்போம்.

வணக்கம்

கருகம்பனை,
காங்கேசன்துறை.
31-01-1987.

திருப்பணிச் சபையினர்,
அருள்மிகு நாக இராச
இராசேஸ்வரி தேவஸ்தானம்

உ

ஓம்சக்தி

காப்பு

இந்துக்கள் சிந்தையில் முந்திக் கொண்டுள்ள
மூல முழுமுதல் தத்துவ முதன்மை
ஞான வடிவ நாயக! விநாயக!
அன்றும் இன்றும் என்றும் என்னைக்
கண்ணில் காக்கும் காவல! கணபதி!
அறிவையும் அழகையும் ஞான எழிலையும்
கணந்தொறும் கருவுற்றுக் காலச் சுழற்சியில்
நவநவ பிரசவம் செய்தவ நாயகி
நாக இராச இராசேஸ்வரி அன்னைமேல்
என்னால் பிறர்க்கும் பிறரால் எனக்கும்
சின்னொரு தீமையும் சேரா திருக்கவும்
பிறரால் எனக்கும் என்னால் பிறர்க்கும்
தினையள வேனும் திருமை சேரவும்
அவதி அற்றும் உவகை உற்றும்
மல்லிகை முல்லைபோல் மக்கள் மலரவும்
அவள்அருள் வேண்டி அவள்பதம் பரவிச்
சரள நடையில் சதகம் பாட
விழைவேன் ஐயா! விற்பனம் இழைந்துஅது
அன்னை மார்பகம் அணிமணி ஆரமாய்
மின்னி மிளிரும் மேன்மைகள் தருவாய்!
தச்சந் தோப்புத் தயா நிதியே!
நித்திய காப்புநீ! நின்னொளி வாழ்க!

## கருணைப் பொழிவு!

வெள்ளிப் பனிவரை நாரத்தம் புல்வெளி மேய்ச்சலிடும்
கள்ளக் கருவிழி மானே கருகம் பனைவடலி
துள்ளித் திரிந்திடும் கொள்ளை விருப்புனக்கு எய்தியதேன்
கள்ளங்கள் அற்றவர் வாழ்பதி என்றொரு காரணமோ? 1

நாத வடிவினள் நாக இராச இராசேஸ்வரி!
சோதி நிலையினள் சுந்தர நீலச் சுடர்விழியாள்!
வேத விழிகளில் வீற்றிருப் பாள்அருள் நுட்பவியல்
ஓரும் உணர்வினர் உண்மை உலகின் உறவினரே! 2

மழலைக் குழந்தை மலர்கள் மணிச்சுனை மங்கைஎழில்
அழகுக் கவிதை அதிசய தென்றல் அமுதநிலா
பழகு பலமொழி பண்புடைக் காதல் கலைகாவியம்
சகலம் இவளாய்த் தனித்துவ சக்தி தலைப்படுமே! 3

இலட்சோப லட்சம் இதயங்கள் அர்ச்சனை செய்துருகும்
கலைக்கோல நாயகி காமாட்சி வாழ்வு தடம்புரளா
நிலைக்கான ஞானச் சுவடிகள் எல்லாம் இவள்! இவளே!
சளைக்காது கும்பிடக் கும்பிட இன்பம் குலுங்கிடுமே! 4

கூதலும் வெய்யிலும் கூற்றுவன் ஆகும் அவத்தையிலே
காதல் குறுநகை செய்வாள்! கயல்கள் பனித்திடுவாள்!
மோதலும் இல்லை. முனகலும் இல்லை. முதுவினையின்
ஏதங்கள் சற்றும் வெதுப்பலும் இல்லை. விதிபுதிதே! 5

சரியான எல்லாம் தருவாள்! சபைமுன் இருத்திடுவாள்!
புரியாத யாவும் புரியவைப் பாள்!மலர்ப் பூங்குழலி!
அருவா னவள்!அதி மோன உணர்வில் உருவானவள்!
பரிவா னவள்!ஏழை பங்காளி! பாச மலரன்னமே! 6

வாணாளில் உன்னை இகழ்வார் வரட்சி மதிமருட்சி
தானாக நிற்கும். அவர்களும் உன்னருள் வாசிகளே!
ஆனானப் பட்ட அறிவாளர் நெஞ்சில் அவதரித்து
வாணாளும் அன்னையே ஆருக்குத் தானோநீ தாயில்லையே! 7

புண்ணியப் பூங்கொடி புத்தியில் வாழ்பவள் பொன்னுலகை
மண்ணில் அளித்திடும் மாதரி மன்றில் நடம்புரியும்
கண்ணுதல் பாகம் உடையவள் என்பது கற்பனையே
அண்ணல் சிவன்எனக் காண்பது அவளன்றி வேறில்லையே! 8

வெற்றிமேல் வெற்றி தருவாள்!நல் விந்தைகள் செய்புல
சுற்றத்தைப் பற்றி யிருக்க அருள்வாள்! சுகமிழந்து [மைச்
சுற்றிச் சுருண்டு கிடக்க வருவாள்! சுகந்தமலர்க்
கற்றைக் குழலி கருணைப் பொழிவு கணக்கிலவே! 9

அன்னையே உன்புகழ்ப் பாதங்கள் அன்றி அவனியிலே
எண்ணமோ வேறில்லை. ஏத்தலும் வேறில்லை. என்புருகும்
பண்ணிலே பாடிப் பரவசப் பட்டுப் பளிங்குமனக்
கண்ணிலே வைத்துக் கவிதாஞ் சலிநிதம் செய்வனம்மே. 10

கொன்றை நிழலில் குடியிருப்பாள் கோயில் கும்பிடலும்
கன்றிய ரத்தம் கனிந்திடும்! முட்டுத் தணிந்துவிடும்!
தென்றல் தவழும் மனதில்! திருமிகு தெய்வநங்கை
நன்றிக் கடன்எனக் கோபுரம் கண்டுநாம் வாழ்த்துவமே. 11

## மஞ்சளும் குங்குமமும்!

கூள்ளியும் முள்ளியும் காதல் வளர்க்கும் கருகம்பனை
உள்ளிலே சோற்றியைக் கொள்ளா துயர்சக்தி கொண்ட
தெள்ளி எடுத்துயர் தெய்விக ஞானத் திரவியத்தை [ தனுல்
அள்ளி இறைக்குது அரவிந்தை வாசல் அணைபவர்க்கே! 1

வெற்றிலை வண்ண வடிவினள்! வேத முகிலிடையே
சுற்றி உலாவும் சுடர்மயில்! மூளைத் திருவிலிகள்
முற்றிலும் காண முடியாமெய்ஞ் ஞானக் கொழுகொம்
பினைப்
பற்றிப் படர்பவர் பாசாங்கு செய்கின்ற பண்பிலரே! 2

அருளாத பேச்சும் அடங்காத அன்பும் அரவணைப்பும்
மரியாதைப் பண்பும் மலிகரு கம்பனை மாதரெலாம்
திரளாகக் கூடி உனதெழிற் கோயில் திருத்தொண்டுகள்
பரிவாகச் செய்கின்ற காட்சியைக் காண்பதும் பாக்கியமே! 3

சீர்காழிக் கன்றுக்கு ஞானப்பால் ஊட்டிய சீமாட்டியோ
கார்காலம் அற்றநம் ஈழப் பயிர்களைக் கைவிடுவாள்?
பேரான கல்விக்குப் பெண்ணம் பெரியவள் அன்னைமடி
தார்சூடும் உங்கள் சிறுவரைச் சேர்ப்பிரே தாய்மார்களே! 4

பங்கய மங்கையர் வந்துன் திருப்பள்ளி வாசலிலே
செங்கயல் முத்துக்கள் சிந்திக் கனிந்து செயலிழந்து
தங்கத் தமிழை வளர்க்கும் தகுதி தருகஎன
அங்கவர் மன்றாடும் ஆற்றலை ஆர அளித்திடம்மே! 5

பூரித்த நெஞ்சம்! எதையும் புரிந்திடும் புத்திநுட்பம்!
பூரியரைக் கண்டு பொள்ளெனப் பாயும் புலிமறவர்
கூரிய வேல்விழிக் கொற்றவை யேதிருக் கோயில்வர
வாருறை வாள்கொடுத்து அன்னாரை வாழ்த்தி
வழியனுப்பே! 6

நீலக் கருவிழி நீச்சற் குளம்என நெஞ்சுருகும்
மாலைப் பொழுதும் மயங்கும் நளின மதுகரங்கள்
கோலம் அழிந்திடக் கும்பிட்டு மஞ்சளும் குங்குமமும்
வாலை வளம்பட வேண்டும் வரம்அருள் வான்மகளே! 7

கன்னிமை மூப்பதும் கட்டிள மைக்கவின் குன்றுவதும்
பொன்மயில் அன்னவர் புண்ணென வாழ்வு குமுறுவதும்
உன்னைப் பிழியலை? என்னடி லாபம் உனக்கிதிலே?
கண்மணி ஆனவர் காலப் பயிர்செய் கதியருளே! 8

பாரிய நூல்கள் பலப்பல கற்பினும் ஆண்தகைமைச்
சீரியல் குன்றிய சீதனம் கேட்கும் நபுஞ்சகரை
வாரிய கூந்தல் வனிதையர் உள்ளம் வருத்துவரை
நேரிய உன்வாள் பசிக்கிரை தேரும் நிலையருளே! 9

மூலைக்கு மூலை முதுவர் முழங்கும் முதுமொழிகள்
சாலைக்கு வந்திள மட்டங்கள் சால்பைச் சரிப்படுத்தும்
சீலம் நிலவும் கருகம் பனையின் சிவநிதியை
ஏலத்தில் வாங்கவும் சாலத்தில் எய்தவும் ஏலுவதோ? 10

நவராச ராசேஸ் வரியன்னை நாம பசனையிலே
புவிமீது ராச சுகபோகம் எல்லாம் பொலிந்திடுமே!
அவமான வாழ்வும் அறியாமை நோயும் அவலங்களும்
அதிபார மாக உடையார் இதனை அறிந்திலரே! 11

## பதாம்புய மோகம்!

காங்கேசன் சாலைக் கடற்கரை ஓரம் கவின்மிகுந்து
பூங்காவும் முந்திரித் தோட்டமும் புத்தம் பொலிவுதரும்
பாங்கான ஊர்கரு கம்பனை மேவும் பரமேட்டியை
ஏன்காணும் இன்னமும் ஏத்தாது இருக்கிறீர் ஈழவரே? 1

அங்கிங் கெனுமலே எங்கும் நிறைந்தவள் தாய்எனினும்
இங்கோர் அதிசயம் என்றும் நடக்குது இனியவரே!
சங்கைக் குரியவள் கோயிலைச் சாரும் சகலருக்கும்
அங்கப் பிணிகள் பொடிப்பொடி யாய்விடும் அப்பொழுதே. 2

எல்லாம் தெரிந்தது போன்ற பிரமை ஒருபுறமும்
வல்லார் மொழிவழி வாழும் நயப்பு மறுபுறமும்
பொல்லா வினைக்குள் புகுந்துகொண் டேனை அலைக்கழித்தும்
வல்லாள் பதாம்புய மோகம்என் சிந்தையை விட்டிலதே. 3

நாளை நடப்பது எதுவாகும் என்றுளம் ஏங்காமலே
வாழும் வகைக்கான வழிகள் பலவும் வளர்த்திடுவாய்
தாழும் மலரென வைத்திடு! அந்த மலருக்குள்ளே
பாவம்வெண் நாகம் பதுங்கவை யாதே பசுங்கிளியே. 4

நீரொடு தீயும் நிலமொடு காற்றும் வெளியும்எனச்
சீர்படு பூதங்கள் ஐந்தும் சிவைவெளிப் பாடதனல்
பாழ்படு தேகம் எனப்பல பாடி நடிப்பவரை
வாள்கொடு வெட்டினும் சீற்றம் தணியுமோ வானரசீ. 5

பச்சை மணிக்கிளிப் பாரதி பச்சை உலகியலின்
இச்சை எழலும் உடனுடன் தீர்த்திடும் ஈரநெஞ்சள்!
அச்சம் திகிலில் அபயம் அளித்திடும் காளிஅவள்!
பச்சைத் தமிழில் அவள்புகழ் பாடிப் பரவுவனே. 6

பஞ்சப் பொறிகளும் வேலைசெய் துன்னைப் பவுத்திரமாய்
நெஞ்சத் தடத்து முளைவைத்துக் கொள்ள உதவிடினும்
பஞ்சத் தமிழில் வளரா மனமே பலம்மிகுந்து
மஞ்சக் குழலிஉன் ராசாங்க மாட்சிமை பேசுகுதே! 7

நாலனு ஐந்தனு ஏலத்தில் பண்ணை விலைபகரும்
மாரிச கும்பலுன் மாண்பையும் பேச மறப்பதில்லை.
ஆனதி ஞலே அடுத்த தலைமுறை ஆகவரும்
வானர கூட்டமும் வாலாட்டிக் கொள்ளுது,
வாலிழையே! 8

எரிகிற விட்டில் பிடுங்கிற நாய்கள் எரிவெயிலில்
கருகிற பூக்களில் தேன்மாந்தச் செல்லும் கருவண்டுகள்
உருகிற மாதிரி ரத்தம் உறிஞ்சும் குருவிச்சைகள்
புரிகிற தெய்வப் பிரசங்கம் உன்னைப் புதைக்குதம்மே! 9

மத்தாப்புப் பூங்குலை தன்னில் ஒளிந்துநல் வானழகை
முத்தாப்புச் செய்திடும் வித்தார மோகம் மயக்கிவிடப்
பித்தாகி நிற்பேன்! பிரபஞ்ச மாயை விலகிவிடும்!
சத்தான வாழ்வின் அதிமூலம் நீதான் சரஸ்வதியே! 10

கோடிகோடி இன்னல் இடும்பை மலைபோல் குவிந்தாலும்
வாடாத சிந்தை வலுவினல்உன் வாசல் வளவெல்லாம்
பாடும் புலவர்கள் கூடும் மணிமன்றம் 'கூடல்' என
மோடி விரகால் அமைப்போம்! முதல்விமேல்
ஆணையிதே! 11

## ஞானப் பூஞ்சோலை!

மின்னல் கொடியில்உன் மேனியைக் கண்டு பரவசமாய்
முன்னம் அழுந்திய ஆசை அகல முகைவெடிக்கும்
கன்னல் கவிதையில் உன்னை மடக்குவன்! கற்றவர்க்குச்
சொர்ணக் கிழிதரும் வண்மைக் கருகம் பனைச்சுடரே! 1

நவமாய் மனதுள் புகுந்தாள்!என் வாழ்வு நடுக்கடலில்
அவமாய் அழிந்துஅடி மண்ணோடு மண்என ஆகாமலே
சுயமாய்ச் சுமங்கலை கைதந்து நன்கு நெறிப்படுத்தி
வளமாக நுண்தமிழ் யாத்திரை செய்கஎன வாழ்த்தினளே!
2

அத்துளுப் பொய்கையில் அன்றாடம் கண்டுநான்
ஆனந்திக்கும்
சக்திஎன் பள்ளிநாள் வாணியாய் வந்தாள்! புலமை
தந்தாள்!
பித்துறும் பின்னாள் சிவதியாய்த் தோன்றினாள்!
சீர்மைசெய்தாள்!
வித்தகி இந்நாள் இராசேஸ் வரிஎன வீறீவளே! 3

வீறோடு வைத்தெனைப் புத்தேடு துவக்கி விதிதரும்நற்
பேறென யான்பெறு மக்களைத் தான்சுமந்து என்னினியர்
ஏகும் எழுச்சியும் எய்திடல் தன்கடன் என்பவள்போல்
ஊரும் உலகும் உனக்கும் பணிசெய ஊக்கினளே! 4

ஏம்பலிப்பு எல்லாம் அகற்றிவிட் டேன்!அடி அம்பிகையே!
காம்பு கழரும் மலர்என ஆகுமோ கற்பனையும்?
தேம்பி அழுவேன் வசந்தக் கொடிகளை எண்ணியெண்ணிக்
கூம்பிய உள்ளம் விரிந்து நறுமணம் விசவைவயே! 5

தமிழான வாழ்வியல் தந்த தயாபரை தன்னிச்சையாய்
அமுதான சிந்தனை ஆராது அளிப்பவள் அற்புதங்கள்
கனிவான சொற்களில் காட்டாற்று வேகத்தில் நாளெழுதும்
நவமான காவியச் சோலையில் தென்றல் நடைபோடுமே! 6

அங்கத் தெழுந்த கனிகளை எண்ணி அனலிடையே
மங்கிக் கருகி மனமழிந்து அம்மா மரணிக்கிறேன்!
பொங்கும் கருணைப் பிரபையில் இந்த இளமொட்டுகள்
மங்கா ஒளியுடன் வாசனை விசி மலரட்டுமே! 7

பொன்பூச் சொரிந்திடும் வான நிலாஅப்பூம் பந்தலிலே
அன்பே அருட்கனி யேஉன் பவனி அழகுகண்டு
என்பே உருக இதயம் உருகச் சிலிர்த்துமதி
இன்பே தொடரும் இணையற்ற சொர்க்க உலாவருமே! 8

நீலங் கலந்துவர் நீருக்கு நின்கண் நிறம்ஊட்டியும்
மேலும் அதனடி சங்க நிதியம் மிளிரவைத்தும்
வேலை அலைகளின் கூத்தை அடக்கி அமைதிதந்தும்
ஏலக் குழலீ! அலைமீது பள்ளிகொள் ஏதுஎன்னே? 9

கற்பனை யாத்திரை காண முடியாக் கருகம்பனைச்
சிற்பரா சக்தியைச் சிந்தையில் வைப்போம்
செயம்உறுவோம்!
அற்பநாள் வாழ்வை அசிங்கப் படுத்தோம் அவதிஉறோம்!
விற்பன வல்லி விரும்பருள் வேண்டி விரைவம்இன்றே! 10

தீர்த்தநீர்க் கேணி திருவினர் வதிமடம் பூந்தோட்டம்
சீர்த்த மதியினர் சிந்தனைச் சேமிப்பு நூல்நிலையம்
ஆக்கி அருள்பொழி ஆலயம் ஞானப்பூஞ் சோலைஎன
நாச்சி பெரும்புகழ் நாமென்மை கொள்ள நவிலுவமே! 11

## விலை வைக்கிறியே!

பெரிய இடத்து மகளிர் [1]எழுவர்குற் றேவல்செய்ய
வரிசை மிகுந்து கருகம் பனையில் வளரொளியாய்
அரசு புரியும் இராசி! அடியேன் இதயமும்நின்
அரசுக் கொலுவுக் குரிய அரியாசனம் ஆகாதோ? 1

[2] நங்கநல் லூரில் இராசேஸ் வரி! உன் நவஅழகில்
நுங்கி நுரைக்கும் புனித இதய உணர்வலைகள்
கொஞ்சம் அலவே. குறுநகை ஊறல் உறவுகொளக்
கெஞ்சி விழுவேன். மனம்அணித்தில்லைஎன்று ஏகிறியே 2

---

1. சப்த மாதர்: பிராமி, மகேச்வரி, கௌமாரி, வைணவி, வாராகி, மகேந்திரி, சாமுண்டி

2. சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து தாம்பரம் செல்லும் இருப்புப் பாதையில் 4 மைல் தொலைவில் பளவந்தாங்கல் புகைவண்டி நிலையம் உண்டு. இங்கிருந்து கிழக்குப் பக்கமாகச் சுமார் அரை மைல் தொலைவில் அருள்மிகு இராசஇராசேஸ்வரி கோயில் அமைந்துள்ளது. தனக்கெனத் தனித்துவமான அமைப்புக் கொண்ட கோயில். செவ்வாய், வெள்ளி, முழுநிலவு (பௌர்ணமி), விஜயதசமி போன்ற நாட்கள் சிறப்பான வழிபாட்டுத் தினங்கள். கருவறைத் திருவுருவம் மிகமிக வசிகரமானது!

வாடா மலரே! வடியா அருட்புனல் வான்வீழ்ச்சியே!
தேடாத் திரவியம் நீயே எனஉனைத் தேடுதற்கு
மாடாய் உழைப்பேன். மரகத மஞ்சுள மல்லிகையே!
வாடா எனஒரு சொல்லுக்கு நீவிலை வைக்கிறியே! 3

மோகினி யோநீ முடிவிலாச் சிந்தனை வெள்ளத்திலே?
சோதனை மேல்ஒரு சோதனை உன்சுக போகம்உறல்?
வேதனை தீர விடிவெள்ளி காட்டி, எழுஞ்சுடரில்
போதனை செய்என வேண்டப் புறக்கணித்து ஓடுறியே! 4

பொய்தொட்ட வாழ்வில் புழுங்கிய பின்னர் புயலிருட்டில்
கைவைத்த கோலம் கழுவிய பின்னர் கனகமணிப்
பைவைத்த ஆசை நழுவிய பின்னர் பசுங்கிளிஉன்
மெய்தொட்டுப் பார்க்கப் பயில விழைவேன். விலகிறியே! 5

பருவத் தமிழில் பணிக்கும் தமிழில் பரவலாகப்
பயிலும் தமிழில் பரமேஸ் வரிநீ பரிவுகொண்டு
சொரியும் கருணை மழையைப் பருகும் பெருநயப்பைக்
கிளரக் கிளர உரைப்பினும் என்குறை கேட்கிலையே! 6

தோழியும் தோழனும் ஏனோநான் நின்னிடம் தொற்றிடவே?
நீளக் கனவுகள் காண்பேன்; நெடுகத் தொடர்ந்திடுவேன்.
கோயிற்பூ சாரிகள் பாபாக் குருமார் எனதகத்து
வாசல் மிதிக்க விடேன்அதை நீவர வேற்கிறியே! 7

எனக்கும் உனக்கும் தரகர் ஒருவர் இடையில்நின்று
மனச்சுமை தீர்ந்திட மந்திரம் சொல்லி மலர்சொரியும்
மினக்கெடு வேண்டேன்நான். மெல்லென மெல்லென ஆகிலுமே
தனிப்பட யாத்திரை செய்துனைக் கூடத் தவிப்பனம்மே! 8

கைக்கிளை வாழ்வில் கனநாள் கடத்தேன். கனிமொழிஉன்
மெய்க்கிளை ஆகும்அதி மேன்மை உறவை நுகர்ந்திடற்கு
எத்தனை துன்பம் இடர்த்தடை நேரினும் வெற்றிகண்டு
சத்திய மாக உனைநான் அடைவேன். சயம்எனக்கே 9

ஆக்கல் அளித்தல் விடுதலை நல்கும் அருட்சக்தியைத்
தேக்கி வைத்துள்ள திருவிழிப் பார்வை தெரிமுனைவர்
நோக்கு மீனாட்சி காமாட்சி விசாலாட்சி என்றுன்அருள்
விச்சை உணர்த்திய அற்புதம் எண்ணி வியப்பனம்மே! 10

பேரா யிரம்கொண்டும் பேசரிய நாச்சி பெரும்பாதம்
ஆரார் அழுதழுது அஞ்சலி பண்ணி அகம்நெகிழ்வார்
மேலான வாழ்வும் மெலியாத கீர்த்தியும் மேவிடுவார்.
நாலா யிரம்தரம் சொல்வேன் நமதாச்சி மேல்ஆணையே! 11

## குடமுழுக்காடும் குதூகலம்!

கருகம் பனையூர் கடவுள் திருக்கோலம் கொண்டுகல்லும்
உருகும் படியொரு தெய்விக சந்நதம் கொள்ளுதங்கே!
பெரியவள் நாச்சி குடமுழுக் காடப் பெருகும்அன்பர்
அரையில் துணியும் அவிழ்ந்திட மெய்ம்மறந் தாடுவரே! 1

முற்பகல் காந்த வசிகர மான முதுமகளிர்
சிற்பரை பைரவி ஞான முழுக்குத் திருநிகழ்வு
பொற்புற வேண்டும் புனித திரவியம் தந்துமிக
அற்புத மாகவும் ஒப்பனை செய்தனர்! அன்பினரே! 2

மெய்கண்ட செல்வரும் போற்றிள வாலைகள் மேனிதங்க
மைகண்ட தென்ன மணிப்புரிப் பட்டுடை மாட்சியராய்
மைகண்ட வண்ணன் மதுசூதன் தங்கை மகிழ்முன்றிலில்
கைவந்த கோலம் அனைத்தும் எழுதிக்கை கூப்புவரே! 3

காடுங் கரம்பையும் நாடும் பொழிலும் எனத்திரிந்து
சாடும் பகைஞரைச் சாகடிக்கும் வீர சரபங்கள்
வாடா வகையருள் அம்பிகை கோயில் அடங்கலும்விண்
நாடே மயங்கும் அலங்கார சோபனம் நாட்டியதே! 4

பெற்றநற் றாயின் பெருவிழா என்ற பிலுக்குடனே
குற்றம்இல் வள்ளியைக் கூடுங் குமரவேல் மைந்தன்அருட்
பித்துற ஏற்றிய நித்தில நீல விழாக்கொடியும்
வித்தக வீறுடு தாயருட் பேரொளி வீசுகுதே! 5

மூந்தது சும்மா விடுமோசொல்? மூளை விரகும் அன்றோ!
பார்ந்தது (ம்) ஆனை விழுந்தான் படலையில் நின்றபடி
ஆர்த்த பிரணவ நாத ஒலியுடன் அங்குவந்து
தார்ப்படும் அன்னை விழாவின் தலைமையைத் தாங்கியதே 6

நாச்சி புதுமைகள் நாலா திசையும் பரவியதால்
மூச்சு முழுவதும் சக்திஎனும் ஈழம் முழுதாக
ஆச்சி அருட்புனல் ஆடும் அதிசுகம் ஆனந்திக்கும்
கூர்த்த மதிக்கரு கம்பனைக் கோயில் குழுமியதே! 7

இந்துக்கள் அல்ல இணையற்ற மாரியை மேரிஎனச்
சொந்தம் வணங்கும் கிருத்தவ அன்பரும் சூழ்ந்துகொண்டு
வந்தனர். அன்னை திருமுழுக்கு ஆடும் வடிவழகில்
சிந்தை பறிகொடுத்து ஏத்தினர்! தோழமை சிந்தியதே! 8

மன்முடி நெற்றி நுனுகி மலரும் மதிக்கொழுந்தை
அன்றாடம் வான்வெளி கண்டு வணங்கும் அறிஞர்களும்
என்றா கிலும்ஓர் உலகரசு எய்திடும் என்பவர்போல்
நின்றார்கள் வந்து நிருமலை ஆலய நீழலிலே! 9

பங்கய வெண்மலர்ப் பள்ளிகொள் தூய கலைவாணியும்
இங்கித கீதங்கள் பாடி எழுச்சியை ஏற்றுவளே!
செந்திரு மங்கை நவமணிக் கூட்டம் சிறந்தமைய
அந்தமில் ஆச்சி அரியா சனம்வைத்துப் போற்றுவளே! 10

பார்வதி நாத சிவத்தின் கவிதை நளினம்உறும்
ஊர்வசி ஏனை அரம்பையர் கூடி உவந்தசைந்து
பேர்மிகு நாச்சி பெருமுழுக் காடப் பெருகுகங்கை
நீர்கொடு வந்துயர் நாகரி நீழல் நடனிப்பரே! 11

மாயப் பொடிகொண்ட மாணிக்க வல்லியின் மார்பகத்தே
தோயும் அதிட்டம் அடித்தது கோகினூர் வைரத்துக்கே!
பேயும் நெகிழ்வுறப் பெய்வளை போர்த்திய காஞ்சிபுரம்
தாயின் திருமேனி தோயும் தவம்எங்குச் செய்ததுவோ? 12

பிரியில் தரியேன் எனச்சூள் உரைத்தன ளோதெரியேன்
கரிய இருட்டிலும் கண்ணுதல் தாளத்துக் காடுகின்ற
பெரிய மனசில் பிணிப்புண்ட மாதவன் ஈசன்முத்து
மரியை சிரசில் மணிமகுடம் வைத்து மகிழ்ந்தானே! 13

புத்தம் புதிய புதுமனைக் கோயில் புகுந்தருளும்
நித்திய பூரணி நிர்க்குண நாயகி நேசவல்லி
நர்த்தகி ராச இராசேஸ் வரிதிருக் காட்சிநலம்
பத்தரை மாற்றுக் கவிஞர்க ளாலுமே பாடரிதே! 14

குங்கும ரூபி குடமுழுக் காடிக் குதூகலமாய்
மங்கள மஞ்சள் கயிறு துலங்கும் மணிமார்பகம்
எங்களை ஆளும் இரக்கம் சுரக்கும் எழிலகமாய்த்
தங்கச் சிவிகை வருகிருள்! எங்கள் தவம்தவமே 15

மனப்பார மாய்ச்சல் மறைந்தது மாதா மலர்விழியால்!
தனப்பார ஆசை தவிர்ந்தது தாயின் தவக்கரத்தால்!
இரப்பாரை இல்லா தொழிந்தது ஞாலம் இவள்மயத்தால்!
இனிப்பாரில் வாழ்வோ இனிக்கும்! இனிக்கும்!!
இனித்திடுமே!!! 16

வாரீரோ வாரீர்! கருகம் பனைத்தாய் வடிவோலக்கம்
காணீரோ காணீர்! விழிகுளிர்ந்து அன்னை கவிபாடநீர்
சேரீரோ சேரீர்! சிவக்கனி வல்லி திருச்செவியில்
கூறீரோ நுங்குறை கூடுமே கைமேல் குதூகலமே! 17

கோலா கலமாக மாதா குடமுழுக் காடும்அருள்
பாலாழி நீந்திஎம் பாவங்கள் தீர்க்கின்ற போதினிலே
நாலா புறமும் துளாவிய தென்விழி நாச்சிபணி
சீராய் இராப்பகல் செய்த பெருமாளைக் காணலையே! 18

உள்ளம் துவண்டது! கண்களும் பெய்மழை கொட்டினவே!
பள்ளம் விழுந்தது பாலிகைப் பாடல் வரிசையிலே.
உள்ளும் புறம்பும் உனையன்றி வேறோர் உருவறியாக்
கள்ளம் கபடமும் தேரா வரதரைக் கண்டிலனே! 19

இடியேறு போலும்! இதுமாறி வீழட்டும்! என்றலயப்
படியேறு போது விடையேறு பங்கன் இடபாகத்து
மடிமீது நண்பர் அடையாளங் கண்டு மனம்மகிழ்ந்தும்
அடியோடு துன்ப அலைவற்ற வில்லை. அடிநாச்சியே! 20

கல்வியைக் கண்ணெனக் கட்டி வளர்த்தவன் கண்மணிகள்
வல்லியுன் கோயில் திருப்பணி கண்டவன் நல்மனைவி
எள்ளளவேனும் இடரின்றி வாழ இரங்கிடம்மா!
வல்லவர் ஆக்கியம் மக்களை வையகம் வைத்திடம்மா! 21

நந்தா விளக்காய் நமக்குத் துணையான நாச்சியினை
சிந்தா குலம்தீர்க்கும் சீரான சேமவைப்பு ஆனவளை
பிந்தா தெழுப்பிடும் பேரான கோபுரப் பொன்முடியில்
எந்தாயைக் கண்டு பெருமிதம் கொண்டுநாம் ஏத்துவமே! 22

## சுய வேதனையிலும் ஒரு சுகம்!

உபசார மாண்பும் உயர்ந்தோரைப் பேணும் குணநலமும்
அபசாரம் காணு அருமந்த வாழ்வும் அருட்பணியும்
திருவாகக் கொண்ட கருகம் பனையில் திகழ்கருணை
உருவான ராச இராசேஸ் வரிபுகழ் ஓதுவமே! 1

வெற்றியில் தோல்வியில் விறும் வெதுப்பும் அடைந்திடினும்
பற்றிய நின்எழிற் பங்கய பாதம் மறந்தறியேன்.
சுற்றிய முட்புதர்ப் பற்றை யிலும்நீ துணைக்குவர
வெற்றி சுரமாய் வெளியேறிக் கொள்வதும் என்வலமோ? 2

சலனம் விசனம் இரட்டைகள் ஆகி இருதயத்தை
மலினப் படுத்தியும் சிந்தனைப் போக்கைச் சிதறடித்தும்
நிலவும் பொழுதை நிருமூலம் ஆக்கிடும் நீசவிதி
விமலன் துணையே விலகிட வேண்டும் விரைந்தருளே! 3

சிலநேர பாவம் பலநேர நன்மையில் பாரம்மிக்கு
முழுநேர மாக அமுக்குது மூச்சுக்கு முக்குளிப்பேன்!
அழுதாலே அன்றி அதுபோக வேறு சுளுவானதோர்
வழிஏதும் இல்லை. அதனாலே நாளும் அழுகின்றேனான்; 4

அழுதழுது அன்னைஉன் அற்புத பாதம் அபிடேகித்து
'இழும்' எனும் ஓசைக்கு இணங்கிய சொல்மலர்
தூவுகிறேன்!
பழுதறு நன்மை பலப்பல செய்வதில் பாடுமிகும்
வழுவிய தீமைகள் செய்யா மனஉரம் போதும்அம்மே! 5

கழைக்கூத்துக் காரனும் கார்வைத் துலாவரும் காலத்திலே
பிழைக்கத் தெரியாத பேதை எனப்பிறர் பேசுவதை
பழிக்கும் எனதுளம் பாவாழும் நின்னடி பற்றியதால்
பிழைக்கத் தெரிந்தவன் நானே எனும்திமிர் பேசுகுதே! 6

ஊறு விளைத்தவர் நாறி அழிந்தார்! ஒளிமுகத்தில்
சேறு தெளித்தவர் பாவம் படுகுழிச் சேற்றுக்குள்ளே
பாறி விழுந்தனர்; ஊறி அழுந்தினர்! நான்உடன்கை
வாறு கொடுத்து, அவர் நாணிட வைத்தது நின்நினைவே! 7

அற்பர் சிறுமை அடையாளம் காண முடியாதென
அற்பர் நினைப்பது அதிசயம் இல்லை. அவர்கள்மதி
சொற்பம் எனவேஅவ் அல்திணை வாசனைவீசிகளும்
பற்பல நன்மைகள் என்னிடம் பெற்றிடர் தீர்ந்தனரே! 8

சுயவே தனையிலும் ஓர்சுகம் காணும் உளநிலைஉன்
மயமான வாழ்வுஎன் பதோ?இல்லை. வாச மலர்க்
கொடி!என்
வயமாகி நீநிற்பதோ? அறியேன். வல்லீ! பராசக்தி!
நயமான நீசெய்ய நான்அதைப் பாட விழைவேனடி! 9

வானவில் உன்னை வரவழைத் தென்முன் கொலுவிருத்தி
மோன மொழியில் அழகு முதுமை அடைந்திடாத
ஞான வடிவம். அதுநீ! அதுவேநீ! என்றழுத்தி
வானம் உனக்கும் உரியது! வாஎன வாழ்த்தியதே! 10

பனங்கூட லுக்குள் இனங்கண்டு கொண்ட இராசேஸ்வரி
கணந்தோறும் தெய்வக் கருணை பொழியும் கருமாரியின்
மனம்போல் ஒலிக்கும் மணிக்கோ புரங்கண்டு கோயில்தபோ
வனம்போல் மிளிரும் வகைசெய்து தாயை வணங்குவமே! 11

## வெண்சங்கே முழங்கு!

கருகம் பனையில் கலைகள் வளர்க்கும் திருமகளே!
உருகும் அடியார் உயரும் பெருமை தருபவளே!
புரியும் பணியைப் புனிதப் படுத்தும் புதுஒளியே!
எரியும் வெயிலை நிலவொளி ஆக்கும் அருள்வாழ்கவே. 1

கொடிய விலங்கும் குரூரம் தவிரும் திருவாசலின்
படியை மிதிக்கப் பரிவொடு பார்க்கும் பராபரையே!
அடிமைத் தனத்தின் அதிமூலம் ஆன அநீதம்எலாம்
மடியும் படிநீ மனிதனை மாற்றிடு மாமகளே. 2

அரிய அரிய மனிதப் பிறவி எனமூதாட்டி
தெளியத் தெரித்த மதிமைப் பிறவி மனம்அடங்க
உருகி உணரும் அரசீ! எனதினம் அல்லல்உழந்து
அழுது வடிக்கும் விழிநீரில் நின்விழி நீர்க்கலையோ? 3

என்னவர் கண்ணீரில் மூழ்கித் தவித்திட நானொருவன்
சென்னையில் வந்து தமிழாய்வு செய்திடும் சேதியினை
என்னென்று சொல்வதோ? ஏதை அரசியல் வாதியைப் [போல்
என்னையும் ஏன்படைத்தாய்? அடீ! வெட்கம் எனக்கலவே! 4

பரிதியைச் சுற்றி வருகோள்கள் போலஎன் புலன்கள் ஐந்தும்
சுருளும் இதயமும் உன்னையே உன்னையே சுற்றிநிதம்
வருவது அருள்விழி காணு நிகழ்வோ? என் வாழ்வியலை
அலசும் உலகெனைப் பாவிஎன் றேசா நிலையருளே. 5

புலியின் விழிபோல் குறிவைத்துப் பாய்ந்தெனைப் பற்றிடும்
கலியின் களங்கம் முழுதும் கலையும்; கதிதுலங்கும் [மே
நிலையும் உயரும்; நினைவும் உயரும்; நிகழத்துவன
பலவும் உயரும் பரிசுத்த ஆவி பளிச்சிடுமே. 6

புத்தக மூட்டை சுமக்கின்ற பாப மலட்டுத்தனம்
சுத்தமாய் வேண்டேன் சுகந்த நவசிந் தனைவளம்தா.
புத்தி புதுமை படைக்கும் கறவைப் புதுவளம்தா
வித்தும் விளைவும் நலமே தருபேறும் தந்திடும்மே! 7

ஆதி பராசக்தீ! அத்துளுத் தாயே! இராசேஸ்வரீ!
பேதம் அகன்ற அபேத உணர்வுப் பெருமுதலீ!
வேத வழியை விலகும் சுயவழி யாத்திரையில்
ஏதம் எதுவும் அணுகலை. உள்ளம் கிளர்கிறதே! 8

செவ்வாடை சூடிய செந்தா மரைமுகச் சேல்விழிகள்
செவ்வான மெய்க்கோல ஆதிபரா சக்திக்குச் செய்பூசை
ஐயா அதுஒரு அற்புதமே! அன்னை தனைத்தானே
மெய்யான பூசனை செய்வது போன்றொரு மேன்மையதே! * 9

---

* மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது. சென்னை — மதுரை தேசிய நெடுஞ்சாலையில், சென்னையிலிருந்து 50 மைல் தொலைவில், சாலையின் மிக அருகாமையில் இக்கோயில் அமைந்துள்ளது. மிகக் குறுகிய காலத்திலேயே மிகுபுகழ் பெற்றுத் திகழ்கின்ற இக்கோயிலில் சாதாரண மக்களும் தாமே வழிபாடு செய்வது தனிச் சிறப்பாகக் கருதப்படுகிறது. செவ்வாடை (சிவந்த) சீருடை, அணிந்த பெண்கள் தமிழிலே மந்திரங்களைக் கூறி, குங்குமமும் மலரும் தூவி தீபாராதனையுடன் வழிபாடு செய்கின்றனர். ஆண்களும் பெண்களும் கலந்து நின்று வழிபடுவதும் உண்டு. அன்னை பராசக்தி வீற்றிருக்கும் கருவறை செவ்வொளி நிறைந்து அன்னையின் அருளோடும் அழகோடும் ஒன்றச் செய்யும் உணர்வு அவர்கள் பூசனை தரும் தனிச்சிறப்பு ஆகும்.

செண்பகப் பூவிதழ்ப் பாதச் செழுமைத் திருவளரும்
பண்பகம் வாழும் கருகம் பனைஉன் திருக்கோயிலில்
அன்பெழு பூசனை அவ்விதம் ஆக அகம்சுரந்து
நங்களை ஆளுதி. நாயகி நாச்சி நவநிதியே! 10

செங்குருதி சிந்தி உயிர்மாய நேரிலும் உன்பாத
பங்கயம் பூக்கும் திருக்கோயில் தொண்டு புரிபாக்கியம்
தங்களழில் வீசும் இராசேஸ் வரித்தாயே தா. பால்வெண்
சங்கே முழங்கு! சரவண நாச்சி தனிப்புகழே! 11

## புதிர்போல் மறைத்தாள்!

கொடிமுந் திரிகைக் குலைகளை மொய்க்கும் குருவிகளைத்
துடியிடை மாதர் கவணை எறிந்து துரத்தொலியில்
நடைதடு மாறும் கடுவனை எண்ணி நகைத்துமகிழ்
பதிவளர் தாயைப் பகலும் இரவும் பரவுதுமே! 1

பரவுவேன் நாச்சி! பணிகிறேன்! ஆயினும் பாரடங்க
விரவிய தீக்கோலம் நெஞ்சைக் குடைந்து நெருடுகுதே]
கரவியல் காணு உலகியல் காணும்பே ரார்வத்திலே
தெரிவது கண்ணீர் பெருமூச்சு கம்பலை தில்லுமுல்லே! 2

தருமம் தழைக்கநூ லாயிரம் சொன்ன தரணியிலே
தருமம் ஒதுங்கும் இடந்தெரி யாமல் தவிக்கிறது!
அருமந்த நல்ல மணிஒளி வீசினும் அந்தகார
இருளை விழுங்கிய கேடர்க ளாலே இழுபறியே! 3

தலைவார வில்லை மலர்சூடி நின்ருள்! தரித்திரத்தை
முழுதாக வாங்கிப் பதுக்கிய கண்கள் பசிபாடவே
ஒருகாசும் இல்லை. இருகாலில் வந்த எனக்கொன்றுமே
புரியாது நின்றேன். புதிர்போல் மறைந்தாள்! புரிகிறதே! 4

பாலுக்கு மாந்தி விழிநீர் சொரிந்து பசிக்களையில்
மூலைக்கு மூலைதன் தாய்சேலை நூலுள் நுழைந்துவிம்மும்
நாலுக்கு மூன்று மழலையைக் கண்டு மிகநாணினேன்!
காலத்துக் கேலும் பணிசெய ஏலாக் கதிநினைந்தே. 5

பொய்க்கன்று காட்டி எருமை கறக்கும் புதியமுறை
மெய்க்கென்ன மேன்மை உளதென்று கேட்குது? மேலவர்கள்
பொய்மாயம் வாள்வென்ற போதனை மேலும் புதுப்
பொலிவில்
மெய்என ஆச்சுது! மேலவர் என்றுமே மேலவரே! 6

எனக்கே இலஞ்சம்; உனக்கே இலக்கியம்! இன்னும்மேலே
எனக்கே சுகங்கள்; உனக்கே துயரம்! அதிலும்மேலே
எனக்கே மகிமை; உனக்கே அவமானம்! இந்தவகை
மனப்பாங்கு பண்ணும் மதிவளம் என்ன மதிநலமோ? 7

ஊசி முனையும் கலையூற்றாய்க் காண உவந்தமனம்
ஊசி முனையிலும் ஊழல் எனக்கண்டு உளையுதம்மா
மாசு களைதலை விட்டிங்கு மாசே புரியும்படு
நீச மனிதன் உளவரை நிம்மதி எங்குளதோ? 8

கல்விக்கும் சான்றிதழ் காசுக்குச் செய்யும் கலைநுணுக்கம்
எல்லை கடந்தது! புள்ளி திருத்தும் பெரியபுள்ளி!
அல்லல்நூ றாயிரம் ஆயிரம் கோடி பலகோடியே
நல்லவ ளேஎன்ன நாட்டியம் ஆடுறாய் நாடகத்தே! 9

அல்லலும் தொல்லையும் இவ்வாறு சோடி அரசியற்றும்
சில்லெடுப் பான சகதியில் எவ்வாறு வாழ்வதுவோ?
எல்லை கடந்த இயற்கை எழில்மலர்ப் பூம்படுக்கைக்
கொல்லைக் குயிலாகக் கூவிட வைத்ததுன் புண்ணியமே! 10

வலம்புரி முத்தென வாழ்வும் வளமும் வளர்த்துவரும்
இளங்கொடியே! ராச ராசேஸ்வரீ!உன் இதம்மிகுந்த
தலம்இவ் வுலகினர் யாத்திரை செய்து நலம்பெருக்கும்
தலம்; என நின்புகழ் திக்கெட்டும் ஓயாமல் பாயட்டுமே! 11

## கோயில் அனைத்தும் வலம்வரும் கோயில்!

ஆசார சீலம் அழகுறு மேனி அறிவுரை நூல்
பூராவும் கற்றுப் புலமை சுரக்கும் புதுமையினர்
பேராளும் ஞானக் கருகம் பனையின் பிதாமகளே
வாராளும் மார்பக வல்லி கருணையை வாழ்த்துவமே. 1

காயத் திரிவளர் கட்டுக் கடங்காக் கவித்துவத்தில்
மாய வசியமும் சேர்ந்தது வோஎன் மனச்சிமிழில்
பாயும் புதுவெறி பூர்விக வாசனைக் கூழங்களை
மாயும் படிபண்ணி மந்தார மங்கையில் மாய்கிறதே! 2

மின்மினி கூசி மினுங்கும் ஒளியுன் ஒளிச்சிதறல்!
கம்பளிப் பூச்சிக் கவர்ச்சி உனது கவர்ச்சி! அருள்
மின்னலே! இன்னவை நின்ஓர் இயல்பில் மிளிரும்எனில்
என்னிலே நின்னியல்பு என்னதை ஈந்து மிளிரவைப்பே! 3

நங்கூரம் அற்றிட்ட என்வாழ்வுக் கப்பல் சுழல்காற்றிலும்
பங்கம் உறுமல் கரைசேர்ந்த பாக்கியம் அன்னையேயுன்
தங்க நிலவு தகதகக்கும் ஞான விழிஅல்லி
பொங்கிப் பொலிந்திடும் புத்தொளி என்னைப் புரந்ததுவே! 4

சுயசோ தனைக்களம் கண்ட பரிசோ தனைகளில்என்
அதிவேக மான மதிமோகம் மிக்க செயலதிகம்
விதிவேகம் கட்டி விறுவிறுப்பு ஈந்துயர் வெற்றிதரும்
நதிமூலம் நீயே! என் நாஅமு தூற நவிலுவனே! 5

தேவர்கள் என்மேல் மலர்கள் சொரிந்தனர்! மும்மைநல
மூவர்கள் அன்புடன் ஆசிகள் கூறினர்! முத்திதரும்
தேவியுன் பூவிதழ் உச்சியை மோந்தது! கனவுஎனிலும்
ஆவி இனிக்கிறது! என்னடியோ இதன் உட்பொருளே? 6

முத்தியை வேண்டிலேன்! மூதாட்டி நின்ஒளிப் பார்வை
யினுல்
சக்தி மிகுந்திடும் சஞ்சீவி போல்வதோர் மானுடமாய்ப்
புத்தி மிகுந்தும் அறிவியல் நுட்பம் அதில்மிகுந்தும்
சித்தி மிகுந்தும் வசந்தம் வளர்க்கும் வரம்அருளே! 7

எரிதீச் சுவாலை எனையுண்ணும் போதுன் எழில்வடிவம்
அதுஎனக் கண்டே அருள்மடை வெள்ளத்தில் கூத்தடித்து
விருவிருப் போடெனது ஆவியும் கூட இராசேஸ்வரீ!
அதிசுக மான அழகிய கீதம் இசைத்திடுமே! 8

பிறவாத யாக்கைப் பெரியவ ளே!உன் பெருகும்அன்பில்
உறவாடும் அன்பர் உயருவ தல்லது தாழ்வதில்லை!
அறவாளர் வாழ்கரு கம்பனைக் கோயில் அமர்ந்தவளே!
வரளா(த) புத்தூற்றுப் புலமையில் என்னை நீ வைத்திடம்மா!
9

நாக இராச இராசேஸ் வரிமனம் வைத்தவர்சம்
போகம் அனைத்தும் பொலியப் புவிஆளும் புண்ணியரே!
நோகும் ஒருசிறு தாக்கமும் காணுர்! நுதல்விழியைச்
சாரும் வரைசேரும் சால்பினர் செத்தும்சா காதவரே! 10

கோயில்! இராச இராசேஸ் வரியின் திருக்கோயிலே!
வாயில் அணுக வளமும் புகழும் வருங்கோயிலே!
நோயில் துயரில் பகையில் நொடியா அருட்கோயிலே!
கோயில் அனைத்தும் வலம்வரும் கோயிலை வாழ்த்துவமே!
11

சுபம்!

# பின்னிணைப்பு

ஒருலக அரசு – 1

## தத்துவ மத்திய பீடம்

பாராதி அண்டம் ஒருசீராய் இயங்கவைத்து ஆளுகின்ற
பேரா ளுமைமிக்க பேசரும் ஞான விதைமுதலே
ஆராதனை செய்து இராசேஸ்வரீ என்று அகம்ஒலிக்கும்
பூலோகம் எல்லாம் ஒருமை உணர்வில் பொலிந்திடுமே! 1

சாதி சமயம் சமவாய்ப்புக் கல்வி சமஉரிமை
நீதி எனப்படும் எல்லா நிலையிலும் மானுடத்தின்
வேதனைக் கூக்குரல் ஓலம் மனதை வெதுப்புதம்மே
ஆதி பரையே அசமங்கள் தீர அருளுவையே! 2

அம்மா! சிந்தனைக் கூர்ப்பை நிகழ்த்தும் அறிவணங்கே
சும்மா இருக்கும் சுகநிலை நானோ விரும்பவில்லை.
இம்மா நிலமகள் ஓர்வெண் குடைக்கீழ் இனிமையுறும்
அம்மா இலட்சிய ஆர்வம் வளர்க்கும் வலுஅருளே! 3

சிந்தனைக் கூர்ப்பின் முதற்படி அர்த்தநா ரீசரியம்
வந்தனை செய்வதில் நின்றது தாய்மை அருள்நிலையே
சிந்தனை ஓர முதலடி அச்சமச் சீர்கெடுத்தே
அந்தமில் கோளாறு அநர்த்தங்கள் கண்ட மருள்நிலையே! 4

"யாதும்ஊரே யாவரும் கேளிர்" எனஓர் உலகம்காண்
ஆதிக் கருசிசு ஆகாம லேயே அழிந்து.உலக
நீதிப்பூங் குன்றனைப் பாடி மனுக்குல நேச அன்பின்
ஊற்றில் பிறந்ததைச் சேற்றுக் குளேவைத்துப் பூசிப்பமே! 5

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"–ஓர்பொன்மொழி!
இன்றே நினைக்கவும் தேனூறும் சிந்தனை என்னுயிற்று?
அன்றே சரிந்தது! பனிப்பேழைக் குள்ளே விறைத்திடினும்
இன்றும் பிரசங்க மாரிக் குமிழி அழகுறுமே! 6

வருடும் குருடும் நொடியும் முடமும் ஒருகுடும்பம்!
ஒருவர்க் கொருவர் புரிந்துணர்வு உண்டு. கரும்பினிமை
பெருகும் இனியஇல் வாழ்வு நடத்தும்! பிறைநுதலீ!
அரிதோ உலகம் ஒரேகுடும் பம்என வாழ்வதம்மா? 7

புலியும் புல்வாயும் ஒருதுறை நீருண்ட பாவரிக்குள்
பொலியும் பொருள்அந்த நாடுநல் லாட்சியைப்
போற்றியதே!
வலிவும் வளப்பும் பொதுவுடைமை நீதியும் கட்டமைந்து
ஒளிரும் ஒரேயுலக ஆட்சியில் சாந்தி ஒளிவீசுமே! 8

மனிதாபி மான உணர்வை வளர்த்து மனுக்குலத்தைப்
பிணமாகச் செய்யும் அநீதம் அகல அபேதம்உற
உயர்வான அன்பில் உயிர்களை நேசிக்கும் உத்தமர்கை
கனியாக வீழ்வள் கருணை மலர்க்கொடி காமாட்சியே! 9

ஓர்தெய்வம்! ஓர்வேதம்! ஓர்குலம்! என்ற ஒருமையிலே
வேரோடி மானுட கோடி கனிந்து பெருமையுறும்
சீரான ஓர்தர்ம ஒருலக ஆட்சி எழுச்சியுற
வாரீர் உலகீர்! வலுவாய் உழைப்போம்! உயருவமே! 10

புவிதலம் எல்லாம் ஒருமை உணர்வில் ஒருங்கிணைய
அகில உலகுக்கும் மெய்ஞ்ஞான தீபச் சுடர்கொளுத்தும்
மகிமை வளர்ந்திடும் மத்திய தத்துவ பீடம்எனப்
புனிதை இராசேஸ் வரிதிருக் கோயில் பொலியட்டுமே! 11

ஒருலக அரசு – 2

## சுகானந்த காவியம்

ஒன்றுக்கு ஒருசக்தி என்றவர் எல்லாம் ஒருங்கிணைந்த
ஒன்றுக்கு ஒருமுழுமைக்கு ராசேஸ் வரிஎன நாமம்தந்து
என்றும் வணங்குவர். எல்லா இனமொழி மக்களுமே
ஒன்றாய் ஒருமை உணர்வுற வைத்திடு. நீஅதுவே! 12

ஏகான்ம தத்துவம் கண்ட முதுமுது இந்தியாவில்
மாயாத சாதி குலம்குப்பை எங்ஙனம் மண்டியதோ?
சீரான ஞான உபதேசம் செய்தூய பூமியிலே
சீர்கெட்ட கோலங்கள் எவ்விதம் காடாய்க் கிளைத்தனவோ?

ஓருகண் குருடான வெள்ளிசொல் நீதி உலகுயிரைத்
திருகி முறித்துத் திருகுதா ளம்பல பண்ண,மனம்
உருகி வெதும்பி இருகண் வியாழன் இளைத்துநிற்கும்
பெரிய பரிதாபம் கண்டும் இளகாய் பிசகென்னையோ? 14

மனிதம் ஒரேகொடி பூத்து வசந்திக்க முத்துமுத்தாய்ப்
புனித எழுச்சிகள் தந்தவர் புல்லர்கள் என்பதுபோல்
மனித மணியை நொறுக்கிப் பல்லாயிரம் பேதம்கண்டு
கனியை நறுங்காய் எனச்செய்த நாயன்மார் நாமலவோ? 15

கலைகட்ட ஏலாத கட்டத்தில் ஞான முதிர்ச்சியினர்
கலைநட்டி நிற்றலைக் காணலை யோநீ கருமாரியே!
முலைவிட்ட சிந்தனை எல்லாம் கருகி முடிந்ததல்லால்
விளைவுக்கு நின்ற பயிர்ஏதும் இல்லை. கலியாட்சியே! 16

காலிகள் பட்சிகள் நாய்களைச் சுட்டுத் துலைப்பதுபோல்
வேலி பயிர்களை மேயும் அரசு பயங்கரமும்
சால மிகுந்த இராணுவ நுட்பா யுதங்களும்மா
ஞால மனிதனைப் பீதிப் பிராந்தியில் பிய்க்குதம்மே! 17

தரித்திர நாரா யணர்கள் படும்பாடு போதாதுஎன
நரிச்சதி நாரத நாச்சதி பண்ணி அரசுகளில்
திரித்திரள் வைத்துக் கலாஅம் விளைக்கும் இயக்கங்களும்
புவித்தல மக்கள் ஒருமை புதைக்கின்ற சாத்தான்களே!

மட்டுப் படுத்திடா எந்தவொரு ஆசையும் மானுடத்தை
முட்டுப் படுத்தி முடமாக்கி வாழ்வை முறித்துவிடும்.
எட்டிப் பிடித்தவிண் வெட்டை யிலும்போர் விரும்புகிற
முட்டாள் களுக்கொரு மூளைச் சலவை செயவிரும்பே! 19

கற்றபின் யாரும் பழிக்கஞ்சா வாழ்வில் களைவளர்த்தல்
முற்றக் குளித்தபின் யானை புழுதி புரள்வதொக்கும்.
வற்றாத அன்பூற்று வற்றி வரண்டு வளம்இழந்தால்
முற்றாகப் பூமகள் சாத்தான் பிடியில் முனகுவளே! 20

முதலாளி கூட உலக சமாதானம் பேசுதற்குப்
பலகார ணம்உண்டு. அவைபோலி! ஆழ்ந்த சுயநலத்தில்
உருவான ஓலம்! ஒருபோர் எழுந்தே உலகழியின்
கருவோடு தானும் கரியாகிப் போவது உணர்ந்தவனே! 2-

உலக ஒருமை உயர்சமா தானம் இருநெறியில்
நிலவும் எனஒரு மோட்டெருமை கூட நினையாதே!
சகலம் சமன்செய் பொதுவுடமைப் பாதை புத்துலகம்
நகரும் எனில்அது ஒருல காட்சி நலம்உறுமே! 22

பவளமும் முத்தும் வயிரமும் பொன்னும் ஒருகோவையாய்
நிலவும் அழகில் இதயம் சுருண்டு தமிழ்எழுந்து
கவிதை வரையும் சுகநீர் அருவி குடையும்எனில்
ஒருமை உலகின் சுகானந்த பேரொரு காவியமே! 23

ஓ! நவீன தண்டகா ரண்ய முனிபுங் கவரே! நீர்
ஈனம் விளைக்கும் புராணேதி காசம் இயம்பிடாதீர்!
ஊனம் உறுத்தும் மதமாற் சரியம் அலறிடாதீர்!
ஞாலம் ஒருமை உணர்வெழும் ஞானம் உரைப்பீர்களே! 24

மதிவளக் கூர்மை சமுதாயப் பார்வை மகிமையுற
நவமுறைப் பார்வை மனித ஒருமை நலப்பாடுறச்
சதிபுரி சாத்தான் அடியோடு சாயஉன் பார்வையுற
அதிசுக ஞான அருட்சுடர்! நின்னடி அர்ச்சிப்பமே! 25

முற்றும்

"இராஜி"

தேவஸ்தான வெளியீடு - 2

என்னவர் கண்ணீரில்
மூழ்ந்தே தவித்திட
நானொருவன்

சென்னையில் வந்து
தமிழாய்வு செய்திடும்
வேடிக்கையை

என்னென்று சொல்வதோ?
ஏதை அரசியல்
வாதியைப் போல்

என்னையும் ஏன்படைத்தாய்?
அட! வெட்கம்
எனக்கல்லவே!